
# அமீர் அலி பொது நூலகத்

## திறப்பு விழாச்

# சிறப்பு மலர்



அறிவுப் பொருள் வாழும் அரண்மனை - இனிப்
பெறுவோம் சுகிக்கின்ற திறன்தனை!

சம்மாந்துறை

09 - 10 - 1983

*This Souvenir was published to commemorate the Opening of the Amir Ali Public Library at Sammanthurai on Sunday the 9th. of October, 1983 by Hon. R. Premadasa, Prime Minister of the Democratic Socialist Republic of Sri Lanka, Presided over by Hon. M. A. Abdul Majeed, Deputy Minister of Post & Telecommunication and M. P. for Sammanthurai. Edited by Faavalar Fazeel Kariapper*

# தலைவாயில்

சம்மாந்துறை, சாமுத்திரிகா இலட்சணங்கள் வாய்க்கப் பெற்ற ஒரு தாய். இன்று அவளின் மடியிலே நூலகம் எனும் ஒரு குழந்தை பூப்பார்த்துச் சிரிக்கிறது. இது கருக்கட்டிய வரலாறு உள்ளே வருகிறது.

அறிவின் வெளிச்சத்திலே வாழ்வில் தெளிவுகாண எத்தனங்கள் செய்ய வேண்டியவர்கள் நாம். உலகம் எப்படி விசாலமானதோ அறிவும் அப்படியே. அறிவுத் தெளிவு பெறவும், மனம் புண்பாட்டுப் படித்தரத்தால் உயரவும் வாசிப்பு பெரிதும் உதவுகிறது.

பரந்த அறிவைத் தன்னுள்ளே அடக்கி, பார்வைக்கு அழகாக ஊரின் முகப்பிலே அமைந்து இதோ நூலகம் எனும் இந்தக்குழந்தை தனது பிஞ்சுக்கரம் அசைத்து நம்மை அழைக்கிறது.

நலவு செய்பவர்கள் இரசிக்கப்படுவது நாகரிகந்தான். உயிர் நீத்தாலும் அவர்கள் உணரப்படுவார்கள். அதனுல்தான் பொது நூலகம் என்ற பதங்களுக்கு முன்னுல் ''அமீர் அலி'' என்ற சொல் இணைய வந்தது.

ஒரு மனிதனின் சேவையை மையமாக வைத்து, அவனுக்குரிய முதன்மை இடம் வழங்கப்படலாம். ஆயினும் அந்த மனிதனின் வெற்றி வாழ்க்கையும் ஒரு கூட்டு முயற்சியேதான். நமது நூலகம் **மர்ஹூம் அமீர் அலி அவர்களுக்கு** ஞாபகச் சின்னம் போல அமைந்தாலும் இன்று நாம் அனுபவிக்கும் **திறப்பு விழா** மகிழ்ச்சிக்கு இன்றைய நமது ஊரின் மூத்த புதல்வரான பிரதியமைச்சர் **ஜனப். எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களின்** பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றியும் மற்றும் இவ்வாக்கத்திற்குதவிய அனைவரைப் பற்றியும் மலருள்ளே பேசப்படுகிறது.

நமது சம்மாந்துறையூர் பண்டைப் பெருமையும் இயற்கை வளமும் பல்துறை முன் மாதிரியும் கொண்டது. மூத்தவர்கள் விட்டுச் சென்ற இடத்தில் இருந்து கட்டி எழுப்ப வேண்டிய கடமை சமகால மக்களைச் சார்ந்ததாகும் எனும் கருத்து வாசனையும் இம்மலருள் வீசுகிறது.

அரிய படைப்பிற்கு ஆசி கூறுவது நல்லிதயம் கொண்ட பெரியவர்களின் பண்பு, அவர்களது வாழ்த்தொலி கேட்கிறது. **வாருங்கள் உள்ளே போவோம்.**

— *மலர் ஆசிரியர்* —

1983-10-09ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

மாலை மூன்று மணியளவில்

எமது

## அமீர் அலி பொது நூலகம்

சம்மாந்துறைப் பாராளுமன்ற உறுப்பினரும்,

தபால், தந்தித் தொடர்புகள் பிரதி அமைச்சருமான

ஜனாப். எம். ஏ. அப்துல் மஜீத்


அவர்களின் தலைமையில்

இலங்கைப் பிரதமர்,

கௌரவ ஆர். பிரேமதாஸ அவர்களால்

வைபவரீதியாகத்

திறப்பு விழாப் பெறுகிறது.



சம்மாந்துறைப்
பாராளுமன்ற உறுப்பினரும்,
தபால், தந்தித் தொடர்புகள்
பிரதி அமைச்சருமான —

எங்கள்

**எம். ஏ. அப்துல் மஜீத்**

அவர்களின்

# ஆசிச் செய்தி

வாசிப்பு மனிதனை முழுமைப்படுத்துகிறது. பள்ளிப் படிப்போடு பொது வாசிப்பும் இலக்கிய ரஸனையும் மனித மனத்தின் பண்பாடு — நாகரீகம் என்பவற்றின் வளர்ச்சியிலும் அறிவு விருத்தியிலும் பெரும் பங்கைப் பெறுகின்றன.

இவ்வெண்ணக் கருவை அடிப்படையாகக் கொண்டுதான் எனக்குரிய நிதி ஒதுக்கீட்டின் கணிசமான பகுதியை இப்பொது நூல் நிலைய நிர்மாணிப்பிற்கு ஒதுக்கினேன். ஏற்கனவே பட்டின சபைக் காரியாலயத்தில் இயங்கிய நூல் நிலையம் பெருகிவரும் வாசகர்களை உள்ளடக்கவும், திருப்திப்படுத்தவும் ஒண்ணாத நிலையில் இருந்தமை தான் என்னை நூலக விருத்திப் பணியில் ஈடுபடச் செய்தது.

எமது புதிய நூலகம் பொது மக்களுக்கு வசதியான இயற்கை அழகு செறிந்த சூழலில் அமையப் பெற்றமை மிகுந்த பொருத்தப்பாடாகும். இந்நூலகத் தர விருத்தியிலும், இது அமைந்துள்ள நிலையத்தைத் தெரிவுசெய்வதிலும் அக்கறை காட்டியவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

இக் காணியை நூல் நிலையம் அமைக்கத் தெரிவு செய்த போது பலர் உரிமை கொண்டாடினர். இறுதியில், இந்நிலத்தில் எல்லோர்க்கும் பொதுவான அறிவொளி பரப்பும் அழகிய மனையொன்று அமையப் போகிறதே என்றுணர்ந்து, அன்பு மனம் கொண்டு, இம் முயற்சியின் முதல்படியைக் கட்டிவைத்த அனைவருக்கும் பொது மக்கள் சார்பாக நன்றி கூறுகிறேன்.

இந்நூலகத்தைத் துரிதமாகவும், திறம்படவும் நிர்மாணிப்பதில் சிரத்தை காட்டிய உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள், சம்பந்தப்பட்ட அரசாங்க ஊழியர்கள், சிரமதான அடிப்படையில் நூல் நிலையச் சுற்றுப் புறத்தைச் செப்பனிட்டவர்கள் எல்லோர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது நூலகத்திற்கு, ஒன்று குறைய ஆயிரம் புத்தகத் தொகுதிகளை அன்பளிப்புச் செய்த ஆசிய நிறுவனத்திற்கு ( Asia Foundation ) நன்றி கூறுவதோடு அவர்களின் அன்பான பார்வை எங்களது நூல் நிலையத்தின் மீது மேலும் பதிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

இன்று எமது நூலகம், மாண்புமிகு பிரதமர் கௌரவ **ஆர். பிரேமதாசா அவர்களினால்** திறந்து வைக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அவரின் நல்லாசிகளை இந்நூலகம் பெரிதும் பெறவேண்டுமென ஆசிக்கிறேன்.

எமது ஊரின் இன்றைய மங்கள நாளை முன்னிட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிட எண்ணம் கொண்டமையும், வெற்றி கண்டமையும் இரஸிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நமக்கெல்லாம் அரிய செல்வமாக அமைந்த இந்நூலகத்தால் பிரயோசனம் பெறவேண்டியது நம் எல்லோரினதும் பொறுப்பாகும். இதன் வளர்ச்சி இத்துடன் முடிந்து விடவில்லை. மென்மேலும் வளர்ச்சிகண்டு எமது எதிர்காலச் சந்ததியினர் கூடிய பயன் பெறும் வகையில் செயல்படுமாறு, இச்சந்தோஷகரமான வேளையில் பொது மக்களிடம் அன்பாக வேண்டுகிறேன்.

— நன்றி —

# அமீர் அலி பொது நூலகம்
## அரிய ஒரு முன் மாதிரி

09–10–1983ல் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படும் சம்மாந்துறை அமீர் அலி பொது நூலகத் திறப்பு விழா மலருக்கு இச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

''சீனு சென்றேனும் சீர் கல்வியைத் தேடு'' என்னும் பெருமானுர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிக்கும், ''வாசித்தல் மனிதனை பூரணமடையச் செய்கின்றது'' என்ற பழமொழிக்கும் ''தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு'' என்கின்ற முதுமொழிக்கும் ஏற்ப, மனிதன் கல்விமான் ஆகவும், பூரணமானவன் ஆகவும், நுண்ணிய அறிவாளியாகவும் நூலகங்கள் இன்றியமையாதனவாகும். இவ்வசதியை சம்மாந்துறை வாழ் பெருமக்களுக்கு வழங்க ஏற்படுத்தப்பட்ட நூலகத்தை பிரதம அமைச்சரும், உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, பெருந் தெருக்கள் அமைச்சருமான **மாண்புமிகு ஆர். பிரேமதாச அவர்கள்** திறந்து வைப்பது சாலப் பொருத்தமானது.

சகல வசதிகளும் அமைந்த நூலகத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னேடியாகத் திகழ்ந்தவரும், சம்மாந்துறை மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரும், சம்மாந்துறைப் பட்டினசபை முன்னுள் தலைவருமான **மர்ஹூம் எம். ஏ. அமீர் அலி அவர்களின்** ஞாபகார்த்தமாய் அன்னுரின் பெயர் சூட்ட வேண்டுமென்று பெருங்குரல் எழுப்பிய, சம்மாந்துறை வாழ் நன்றிப் பெருக்குள்ள பொது மக்களின் வேண்டுகோளுக்கமைய அப்பெயர் சூட்டப்பட்டுள்ளமை ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் – உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு'' என்ற வள்ளுவனின் பொய்யா மொழிக்கமைய **மர்ஹூம் எம். ஏ. அமீர் அலி அவர்கட்குச்** செய்யும் நன்றிக் கடனுக அமைந்துள்ளது.

இந் நூலகத்தை நிர்மாணிக்க உள்ளூராட்சி அமைச்சினுல் வழங்கப்பட்ட நன்கொடை முழுவதையும் கொடுத்துதவியவரும், தபால், தந்தி, தொலைத் தொடர்பு பிரதி அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான **கௌரவ எம். ஏ. அப்துல் மஜீத், பீ. ஏ. அவர்களும்** இதனைத் திறந்து வைக்க முன்வந்த பிரதம அமைச்சரும், உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை, பெருந்தெருக்கள் அமைச்சருமான **மாண்புமிகு ஆர். பிரேமதாச அவர்களும்** நீடூழி வாழ்ந்து நற்சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானுக.

**எம். எச். எம். ஜவ்பர்**
தலைவர்,
05–10–1983. அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை.

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்!

# வளர்க நூலகம்!!

உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை கல்வி அபிவிருத்திக்காக ஆரம்ப காலத்திலிருந்தே செல விட்டு வருகின்றன. கல்லூரிகளும், மகா வித்தியாலயங்களும் பல இருக்கலாம். அங்கு கல்வி, காலம் வரையறையானது. ஆனால் இத் தகைய கலைக் களஞ்சியத்தை பொதுமக்கள் தங்கள் வாழ்க்கை பூரா கவும் பயன்படுத்திக் கொள்ளலாம். சம்மாந்துறை மக்களுக்கு குறிப் பாக மாணவ சமுதாயத்திற்கு இந்நூல் நிலையம் ஒரு வரப்பிரசாத மாகும். அத்துடன் சம்மாந்துறையில் தலைசிறந்த கல்லூரியாக விளங் கும் முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் முன்பாக இந்நூல் நிலையம் அமைந்திருப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

பெரிய கட்டிடங்களை அமைத்து பெறுமதி வாய்ந்த புத்தகங் களால் நூல் நிலையத்தை அலங்கரிப்பதால் எந்தப்பயன்பாடும் வெளிப் படுவதில்லை. மக்கள் நூல் நிலையத்தை பயன்படுத்தும் அளவுக்குத் தான் அதன் உண்மையான பயன்பாட்டை நாம் அறியலாம். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.

மாண்புமிகு பிரதமரும், உள்ளூராட்சி வீடமைப்பு நிர் மாணத்துறை அமைச்சரும் ஆகிய கௌரவ ஆர். பிரேமதாச அவர்களால் இப் பொது நூல் நிலையம் திறந்து வைக்கப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இப் பொது நூலகத்தை அமைப்பதற்கு வேண்டிய நிதி உதவிகளை உரிய காலத்தில் பெற்றுக்கொடுத்தமைக் காக இப்பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என்ற முறையில் சம்மாந்துறை பாராளுமன்ற உறுப்பினரும், தபால் தந்தி தொடர்பு கள் பிரதி அமைச்சருமாகிய ஜனப். எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்நூலகத் தின் பெரும்பாலான வேலைகளை சிரமதான பணியில் நிறைவேற்றி உதவிய சம்மாந்துறைப் பொது நிறுவனங்களுக்கும், எனதும் அம்பாறை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக இப் பொது நூலகத்தின் வளர்ச்சிக்குச் சம்மாந் துறைப் பொது மக்களின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இந் நூலகம் ஒளிவிட்டுப் பிரகா சிக்க வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

ஏ. ஜே. எஸ். எச். இல்யாஸ்,
பிர. உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்,
பிரதி மாவட்டச் செயலாளரும்.
அம்பாறை.

## வாழ்க அறிவுச் சுடர்!

செந்நெல் விளையும் பூமியாம் சம்மாந்துறையின் முகப்பில் ஒரு பக்கம் கல்விக்கூடமும், மறுபக்கம் களனியுமான நிலையத்தில் அமைந்து அறிவொளி பரப்பக் காத்திருக்கும் அறிவுக்கூடமானது சம்மாந்துறைத் தொகுதியின் தலைவர் ஜனாப். எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களின் அரிய முயற்சியினால், பன்முக வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக 1980ஆம் ஆண்டு இறுதியில் கட்டிட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று (09-10-83) மாண்புமிகு பிரதமர் கௌரவ பிரேமதாச அவர்களினால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகிறது. இது மனம் நிறைந்த ஒரு நிகழ்ச்சியாகும்.


**ஏ. விக்னராஜா**

உதவி அரசாங்க அதிபர்
சம்மாந்துறை.


நான் 1981 ஜூன் மாதம் தொடக்கம் 1982 டிசம்பர் வரையும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை சம்மாந்துறை உப அலுவலகத்தின் (01) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இருந்த வேளையில் இக்கலைக்கூடத்தின் வளர்ச்சிக்கு என்னாலான பங்களிப்பையும் செய்துள்ளேன் என்ற திருப்தி எனக்குண்டு.

அமீரலி பொது நூலகம் சம்மாந்துறை மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். இவ்வாய்ப்பைப் பொது மக்கள் உரிய முறையில் பயன்படுத்துவதோடு இந்நூலக வளர்ச்சியிலும் நாட்டங்கொள்ள வேண்டும் என்பது எனது விண்ணப்பம்.

'அமீரலி பொது நூலகத் திறப்பு விழா' மலருக்கு இவ்வாசி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க நூலகம்! வாழ்க அறிவுச் சுடர்!!

# எமது நூலகம் பிறந்த கதை

ரி. ஏ. ஜாயா கணக்கீட்டு உத்தியோகத்தர்
அம்பாறை மா. அ. சபை, உப அலுவலகம் - 1, சம்மாந்துறை.

சம்மாந்துறை நூலக சேவையின் ஆரம்பக்காலம் ஒரு குழந்தையின் ஆரம்ப வளர்ச்சியைப் போல் இருந்தது. 1952ம் ஆண்டு வாசிகசாலையின் அத்தியா வசியத்தை உணர்ந்த பொது மக்களும், அப்போதைய பட்டின சபையினரும் 1952-02-08ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் வாடகைக் கட்டிடத்தில் ஓர் இலவச வாசிகசாலையை திறப்பதற்கு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினர். இச்சூழ்நிலையில் பட்டின சபையின் நிதிநிலைமை குறைவாக இருந்ததன் காரணமாக, இத்தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்ற முடியாமல் ஆறு மாதங்களின் பின்புதான் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆவணி மாதம் 1952ம் ஆண்டு 01ந் திகதி வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையின் பின்னர் சம்மாந்துறை கடைத் தெருவிலுள்ள ஒரு சிறிய அறையில் ''சம்மாந்துறை வாசிப்பு அறை'' என்ற ஆரம்ப நூல் நிலையம் காலஞ்சென்ற பட்டின சபைத் தலைவர் ஜனுப் எம். யூ. உதுமா லெவ்வை அவர்களால் சிறிய சமய வைபவத்துடன் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாசிகசாலைக்கு பொறுப்பாளராக காலஞ்சென்ற ஜனுப். சாகுல் அமீத் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். இவ்வாசிகசாலையில் ஆரம்பக் காலத்தில், தினகரன், வீரகேசரி, டெய்லி நியூஸ் போன்ற நாளாந்தப் பத்திரிகைகளும், கல்கி, ஆனந்த விகடன் போன்ற மாதாந்த இந்திய சஞ்சிகைகளும் வாசகர்களுக்காக வழங்கப்பட்டிருந்தன. காலம் செல்லச் செல்ல வாசகர்களின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக அன்றைய வாசிக சாலையைப் பெரிதாக்க வேண்டி ஏற்பட்டது. இதனுல் பக்கத்திலுள்ள அறையையும் 1953ம் வருடம் பங்குனி மாதம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1953-06-29 ல் ஜனுப். ஐ. அகமதும், திரு. எம். கந்தையாவும் முதல் இரண்டு அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் நன்கொடைகளும், அவ்வப்போது எமக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன. உள்ளூராட்சிச் சேவையினரால் வழங்கப்படும் நன்கொடைக்குச் சமனுன தொகையைப் பட்டின சபையும் இந்நூலகத்திற்கு வழங்கவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. 1954ம் ஆண்டில் முதலாவது நன்கொடையாக ரூபா 500/- நூலகத்திற்குக் கிடைக்கப்பெற்றது. முதல் தடவையாக 160 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இதே வருடத்தில் ஏசிய பவுண்டேசன் நிர்வாகத்தினரும் எமக்கு 88 ஆங்கிலப் புத்தகங்களை நன்கொடையாக வழங்கியிருந்தார்கள். இதுவே சம்மாந்துறை பொது நூலகத்தின் வளர்ச்சியின் ஆரம்ப வித்தாகும். முப்பது வருடங்களின் முன்பு வாசிப்பு அறையாக உருவாக்கப்பட்ட இந்தச் சேவையும், நிறுவனமும் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இதன் பின்னர் ஓரளவு வளர்ச்சி அடைந்த நிலையில் எமக்குச் சொந்தமான காரியாலயக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் 1955, மாசி மாதம், 06ம் திகதி சில வசதிகளுடன் மாற்றப்பட்டது. ஆனுலும் இற்றைக்கு 10 ஆண்டுகட்கு முன்பிருந்தே எங்கள் கிராமத்து மாணவர்கட்கு கல்வித்துறையில் அதிக தாகம் ஏற்படத் தொடங்கியது. ஆனுல் இத்தேவையை நாம் பூரணமாக அறிந்திருந்தும் அதனை நிறைவேற்றிவைக்க நிதி நிலைமையும், தரமான கட்டிட வசதியும் எமக்குச் சாதகமாக இருக்கவில்லை. ஆனுல் இன்று திறக்கப்படும் "அமீர் அலி பொது நூலகத்தின்'' மூலமாக இக்குறைபாடுகள் நிவர்த்திக்கப்படுவதாக நான் நினைக்கிறேன்.

சம்மாந்துறைக்கு தரமான ஒரு நூலகம் தேவையென்ற ஆலோசனையை தூண்டி விட்டவர் மர்ஹூம் ஜனுப். முகம்மட் அலி அமீர் அலியையே சாரும். இவர் 1962ம் ஆண்டு தொடக்கம் 1968ம் ஆண்டு வரைக்கும் முதல் தடவையாகவும், 1970ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டு வரைக்கும் இரண்டாவது தடவையாகவும் சம்மாந்துறைப் பட்டின சபைக்கு தலைவராகப் பணியாற்றினர். இப்புதிய கட்டிடம் தற்போது முக்கிய கல்வி நிலையமாக

விளங்கும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவும், அழகிய சுற்றுடலிலும் அமைவதற்கு வழிவகுத்துக் கொடுத்தவர் இவரே. இந்நூல் நிலையத்திற்கான 2 ஏக்கர் காணியை சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபையிட மிருந்து நன்கொடையாய்ப் பெற்றுள்ளார். இதற்காக சம்மாந்துறைப் பொது மக்கள் என்றென்றும் நன்றியுடையோராவர்.

பட்டின சபைத் தலைவராக இல்லாத காலத்திலும் இக் கட்டிடத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்று அவாக் கொண்டிருந்தார். இவர் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சியை முன்னேற்றுவதற்காக கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவராக இருந்து பெற்ற முதல் சம்பளத்தை சம்மாந்துறையில் நிதி வசதியற்ற பல்கலைக் கழக மாணவர்களின் புலமைப் பரிசில் நிதியத்தை ஆரம்பித்து வைப்பதற்காக செலுத்தினார். இது இவரது நற் பண்பை எடுத்துக்காட்டும் ஒரு சிறிய உதாரணமாகும். இவர் மக்களுக்காக ஆற்றிய சேவை அளப்பரியது. இதனை இங்கு எடுத்துரைக்க முடியாத ஒன்றாகும். இப்புதிய நூலகத்திற்கு அன்னாரின் பெயரைச் சூட்டுவது சாலச்சிறந்ததாகும்.

இப்புதிய நூலகத்தைக் கட்டுவதற்கு சம்மாந்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜனாப். எம். ஏ. அப்துல் மஜீத் அவர்கள் மாவட்ட வரவு செலவுத் திட்டத்தில் இதற்குப் பணம் ஒதுக்கி உதவியுள்ளார். 1969ம் ஆண்டில் ரூபா ஆறுலெட்சம் ஒதுக்கப்பட்டு, சம்மாந்துறையைத் தாயகமாகக் கொண்ட பொறியியலாளரும், கட்டிட நிபுணருமான ஜனாப். எஸ். எம் இப்றா லெவ்வை அவர்களுடன் 1979ம் ஆண்டு மார்கழி மாதம் இப்புதிய இரண்டடுக்கு நூலகத்தைக் கட்டுவதற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. திரும்பவும் 1981ம் ஆண்டில் ரூபா இரண்டுலெட்சத்து இருபத்தையாயிரத்துக்கு தளபாடங்கள், புத்தகங்கள், உபகரணங்கள் பெறுவதற்கு ஒதுக்கப்பட்டது. 1982ம் ஆண்டில் மேலும் ரூபா ஒரு லெட்சம் சுற்றிவர மதில்சுவர் கட்டுவதற்கும், மலசலகூடம் கட்டுவதற்கும் ஒதுக்கப்பட்டது. இப்புதிய நூலகத்தைக் கட்டிமுடிப்பதற்கு கிட்டத்தட்ட ரூபா பத்து இலட்சம் செலவாயுள்ளது.

தனிப்பட்டவர்களும் ஆசியா பவுண்டேசன், சிறிலங்கா தேசிய நூலக சேவைகள் சபை, அமெரிக்க நிறுவனம், பிரிட்டிஸ் கவுண்சில், தூதரகங்கள் போன்ற ஸ்தாபனங்கள் புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் வழங்கியுள்ளன. இதில் விசேடமாக ஆசியா பவுண்டேசன் கணிதம், விஞ்ஞானம், பொருளாதாரம், வரலாறு, ஆங்கிலம், கலை, கலாச்சாரம், பண்பாடு போன்ற ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பெறுமதியான புத்தகங்களை வழங்கியுள்ளது. அத்துடன் ஈராக்கிய தூதரகத்தால் பத்தாயிரம் ரூபா நன்கொடையாகப் பெறப்பட்டு அத்தொகைக்கு இஸ்லாமியப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் ஆர். பிரேமதாச அவர்களால் சம்மாந்துறை ''அமீர் அலி பொது நூலகம்'' திறக்கப்படுவதும் பொருத்தமான ஒரு செயலே. சம்மாந்துறைப் பட்டினத்தின் நுழைவாயிலில் மிகப் பிரமாண்டமாகவும், மக்களின் மனதைக் கவர்ந்திழுக்கக் கூடியதாகவும், எடுப்பாகவும் அமைந்திருக்கும் இவ்வாசிக சாலைக் கட்டிடம் எங்களுக்கெல்லாம் பெருமை அளிக்கின்றது.

இப்புதிய நூலகத்தைக் கட்டிமுடிப்பதற்கு நுஸ்றத் நிறுவனம், சமூக சேவைப் பகுதியினர், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பொதுச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுமக்கள் எல்லோரும் தங்களது பேராதரவை வழங்கினார்கள். இப் பொது நூலகத்திலிருந்து சிறியோர், பெரியோர், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற்று மேல்நிலையடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

—★—

# நூல்! நூலகம்!! மர்ஹூம் அமீர் அலி!!!

ஏ. எல். ஏ. சம்ஊன்
(உப அதிபர், மத்திய மகா வித்தியாலயம், சம்மாந்துறை)
ஏ. எச். ஏ. அப்துற்றஹீம் (ஜே. பி.)
கணக்கீட்டு உத்தி., மாவட்ட அபி. சபை உப அலுவலகம் (02) சம்மாந்துறை.

சம்மாந்துறையின் சரித்திரப் புருசர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர்களுள் ஒருவர் மர்ஹூம் எா். ஏ. அமீர் அலி அவர்கள். இவருக்கும் இன்று திறப்பு விழாப் பெறுகின்ற நூலகத்துக்கும் உள்ள தொடர்பு பற்றிச் சிந்திக்கும் போது எங்களால் அவருடைய குண விசேடங்களை நினையாமல் இருக்க முடியவில்லை. பாலியப் பருவம் தொட்டு எங்களுக்கும் அவருக்கும் தொடர்புகள் அமைந்தமையால் அவரைப் பற்றிய நினைவுகள் என்றும் அழியாதனவாகும்.

கல்வி கற்கும் காலத்தில் அறிவின் மீது அவர்க் கொண்ட, மதிநுட்பம் படைத்த ஒரு மாணவனாக அவர் மதிக்கப் பெற்றமை நாங்கள் அறிந்ததே. ஆயின் புத்தகங்களுக்குள்ளே சிறையிருக்கும் தன்மையில் இருந்தும் விலகி நின்று, விளையாட்டு மைதானங்களிலும், இயற்கை அழகுகளுக்கு மத்தியிலும் காட்சியளிக்கும் ஒருவராகவும் இவரைக் கண்டிருக்கிறோம்.

வாசிக்கும் பழக்கம் இவரிடம் இளமை தொட்டே இயல்பாக அமைந்தது. மாணவ காலத்தில் இவருக்கும் தினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்களுக்கும் இருந்த தோழமை நாங்கள் அறிந்ததே. மேலும் கல்வியில் கவனமும், ஆசிரியரைக் கனம் பண்ணும் தன்மையும் இவர் கல்வி கற்ற உவெஸ்லிக் கல்லூரியில் பலவிதமாக இரசிக்கப்பட்டதற்கும் சான்றுகள் உள்ளன. பாடசாலைக் கல்வியோடு இவர் வாசிப்பு மூலம் பெற்ற அறிவின் ஆளுமைதான் உவெஸ்லிக் கல்லூரி விவாத மன்றத் தலைவராக இவரை ஆக்கியிருக்க வேண்டும். அத்துடன் சபையை ஆளுமையோடு கையாளும் ஆற்றலும் இவருடைய சிறந்த மானுடக் கலவைகளுள் ஒன்றாகும்.

உயர்வகுப்பு மாணவனாக இவர் இருந்த காலத்திலேயே மற்றவர்களுக்கும் தன்னிடமுள்ள அறிவை ஊட்ட வேண்டும் என்ற உயர்வான எண்ணம் இவருக்கு இருந்தது. ஆங்கில அறிவு பரவலாக்கப்படாத அந்தக் காலக் கட்டத்தில்-விடுமுறைக் காலங்களில் இங்குள்ள எமது ஊர் மாணவருக்குப் பிரத்தியேக வகுப்புகள் வைத்தமையும் இவர் கல்வி வளர்ச்சி மீது காட்டிய அக்கறையை நமக்கு நினைவுபடுத்துகிறது. அக்காலத்திலேயே தன்னிடமுள்ள நூல்களை நண்பர்களுக்கு இரவல் கொடுத்து வாசிக்கப் பண்ணும் பெருந்தன்மையும் இவரிடம் கருக்கட்டியிருந்தது. இவர் பாடசாலையை விட்டு விலகி வந்த புதிதில் இவரை ஒரு சம்பளமில்லாத ஆசிரியராக அரசினர் ஆண்கள் பாடசாலையில் நாங்கள் கண்டிருக்கிறோம். பணத்திற்காக என்றில்லாமல் சேவையாக நினைத்து அறிவு பரப்பும் இதயம் கொண்ட இவரது தன்மைக்கு இச்செயலும் ஒரு சான்றாகும்.

ஒரு காலத்தில் சமூக நோக்கோடு பணிபுரிந்து வந்த "சம்மாந்துறை இக்பால் மன்றத்தில்" நாங்கள் அவரோடு ஒன்றாக இருந்தோம். எங்கள் மன்றத்தின் பணிகளில் கல்வி விருத்திக்கான செயற்பாடுகளும் அடங்கும். மர்ஹூம் அமீர் அலி அவர்கள் வாசிப்பிலும், நூல் நிலையங்களிலும் அக்கறை கொண்டவராகையால் எங்கள் மன்றச் சார்பாக "முஸ்லிம் முரசு" ப் பத்திரிகையை இந்தியாவிலிருந்து வரவழைத்துச் சம்மாந்துறைப் பொது நூலகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற பிரேரணையை 53-12-16 ஆம் திகதி கொண்டு வந்தவர் அவரே என்று இச்சந்தர்ப்பத்தில் நினைத்துக் கொள்கிறோம். அத்தோடு அக்காலத்தின் வாசிக சாலையில் பல அபிவிருத்தி வேலைகள் செய்ய வேண்டுமென்று இக்பால் மன்றத்தின் மூலம் அமீர் அலி அவர்கள் குரல் எழுப்பி இருக்கிறார். சேர். அல்லாமா முகம்மது இக்பால் அவர்களது கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நமது மதிப்புக்குரிய அமீர் அலி அவர்கள். அல்லாமா இக்பால் அவர்களின் கவிதைகளின் முழுத் தொகுதியையும் பொது நூலகத்திற்கு வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

ஆற்றல் மிக்கவர்களின் கல்விக்கு வறுமை தடையாக இருக்கக் கூடாது என்பதால் இக்பால் மன்றத்தின் மூலம் '' கல்விச் சகாய நிதியம் '' ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டது. இந்த நிதியத்தின் வளர்ச்சியில் அமீர் அலி அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. பிற்காலத்திலே அவர் கிழக்குப் பிராந்தியப் போக்கு வரத்துச் சபைத் தலைவராக வந்தமை குறித்து பொதுமக்கள் எடுத்த இரசனை விழாவின் போது பொதுமக்கள் மத்தியில் தனது முதலாவது சம்பளத்தை ஒப்புவித்து, எமதூரில் வளமான ஒரு கல்விச் சகாய நிதியம் ஆரம்பிக்கும் அபிப்பிராயத்துக்குக் காணிக்கை செலுத்திய சம்பவம் கல்வியில் அவருக்கிருந்த அக்கறைக்குச் சான்றாகும். இது தொடரப்பட வேண்டிய பெரும் பணியாகும் என்பதனை இங்கே ஞாபக மூட்டுகிறோம்.

எப்போதுமே தன்னை ஒரு மாணவனாக நினைக்கும் தன்மை, அறிவாற்றல், நுட்பம், பொதுப் பணிகளில் ஆர்வம், ஊர் நிர்வாகத் தேவை என்பன இவர் ஓர் இளம் அரசியல் வாதியாக மாறக் காரணிகளாயின. சபைகளை ஆளுமையோடு நெறிப்படுத்திச் செல்லும் தன்மையும் இவரைப் பல தாபனங்களின் தலைவராக நிலைத்திருக்கச் செய்தது. ஓர் அரசியல் வாதியான மூத்த சகோதரனின் ஆதிக்கமும், இளமையிலேயே பொதுப் பணிகளில் பங்கு பற்றிப் பெற்ற அனுபவமும் இளைய தோள்களில் முதிர்ந்த தலை அமைந்த ஒரு மனிதராக அமீர் அலி அவர்களை ஆக்கியது என்போமா? எப்படி நீரை நீத்து மீன் வாழாதோ அப்படி இவர் மக்களுள் கலந்து வாழும் குணம் படைத்தவர். எனவே தான் சம்மாந்துறை அரசியலிலும் ஏனைய பல் வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் இவருக்கு வாய்த்தது.

சம்மாந்துறையில் அரும்பியிருந்த நூலகத்தின், வளர்ச்சியும், அருகியிருந்த வாசகர்களின் விருத்தியும் அமீர் அலியின் காலத்தில் தான் என்பதை நாங்கள் எல்லோரும் ஒத்துக் கொள்வோம். சம்மாந்துறைப் பட்டின சபைக் காரியாலயத்தின் ஒரு சிறுபகுதியில் அமைந்திருந்த எமது அன்றைய நூலகம் பரப்பளவில் குறைந்ததாக இருந்தாலும் அதன் புகழ் இந்தப் பிராந்திய மெல்லாம் பரவி இருக்கிறது அக்காலக் கட்டத்தில் மட்டக்களப்புப் பொது நூலகத்திற்கு அடுத்த படியான தரங் கொண்ட நூலகமாக எமது சிறிய நூலகம் மதிப்பீடு செய்யப்பட்டது.

நூலக விருத்தியில் நோக்கம் கொண்ட இக்கட்டுரை நாயகர் ஒரு சிறந்த பட்டின சபைத் தலைவராகவும் மதிக்கப் பெற்றார். 1962ஆம் ஆண்டு தொடக்கம் பட்டின சபை அமைப்பு இலங்கையில் நீக்கப் பெற்ற காலம் வரை இவரும் பட்டின சபையும் இரண்டறக் கலந்திருந்த நிலை நாமறிந்ததே. தோல்விகளைச் சமாளிக்கும் நாகரிகம் கலந்த நுட்பம் இவரை எப்பொழுதும் வெற்றியாளனாகவே வைத்திருந்தது.

மர்ஹூம் அமீர் அலி அவர்கள் சார்ந்து நின்ற அரசியல் கொள்கைகளுக்கு எதிரணியாக நின்ற முன்னைநாள் பொதுநிர்வாக - உள்ளூராட்சி அமைச்சர் கனம் பீலிக்ஸ் ஆர். பண்டாரநாயக்க அவர்களுக்கு அமீர் அலி அவர்களின் பட்டின சபைத் தலைவர் பதவியை இல்லாமல் செய்ய வாய்ப்பிருந்தும் தன்னுடைய கட்சி அரசியலுக்கு அப்பால் அமீர் அலி அவர்களின் தனி மனிதப் பண்புகளுக்கும், நிர்வாகத் திறமைகளுக்கும் முக்கியத்துவம் அளித்தமை, 'சேமன்' அவர்களின் வெற்றி வாழ்க்கைக்குச் சிறந்த சான்றாகும்.

> '' ஆற்றலிலாதவரை அரங்கம் மதிக்காது, ஏற்றந்தான் எம்மிடையே இவர் பிறந்து வாழ்ந்ததுவும் '' என்ற வரிகள் எங்களுக்கு இப்போது நினைவு வருகின்றன.

பட்டின சபைத் தலைவர்களின் பொதுவான தன்மைகளோடு இவருக்கென்றே அமைந்த கல்யாண குணங்களும் பல. நூல்நிலைய விருத்தியின் மூலம் பட்டின சபைக்கு எந்த வருவாயும் இல்லாவிட்டாலும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான தொகையை நூல் நிலைய விருத்திக்கு ஒதுக்குவதில் முனைப்பும் தாராளமும் இவர் காட்டினார். பட்டின சபைத் தலைவர் பதவியை இவர் தனக்கு வருவாய் தரும் ஒன்றாக நினைக்கவில்லை. தனக்குரிய இலவசப் புகையிரதச் சீட்டுக்களையும், பிரயாணச் செலவுப் படிகளையும் இவர் எப்போதுமே பெற்றுக் கொள்ளவில்லை. மேலும் ஊர் விசாலிப்பு, வடிகான் அமைப்பு, பாதை விருத்தி, விளையாட்டு மைதானம், பொதுச் சந்தை, நீர் விநியோகம், மின்சார விசாலிப்பு, கூட்டுறவு என்று சம்மாந்துறையின் நாடி நரம்புகளில் எல்லாம் இவரது ஆற்றல் வீரமாக ஓடியது.

பொதுமக்களின் இன்ப துன்பங்களில் பங்கு பற்றும் தன்மை இவரைச் சனரஞ்சகமான தலைவராக மதிக்க வைத்தது. அத்துடன் எப்போதுமே இவருக்கென்று ஒரு இரசிகர் வட்டம் இருந்தது. அவர்கள் தீவிரமாக அமீர் அலி அவர்களில் அன்பு செலுத்தினர்; இக்கட்டுகளில் உதவும் நம்பிக்கை விளக்காக இவரை மதித்தனர். இத்தனைக்கும் மத்தியிலே மர்ஹூம் அமீரலி அவர்கள் ஒரு சிறந்த குடும்பம் பேணியாகவும் வாழ்ந்தார். நல்ல கணவராக அன்பான தந்தையாக ஜீவித்தார். இவருடைய அரசியல் வாழ்க்கைக்குத் துணையாக அமைந்த இவரது மனைவி திருமதி ருஹிலா அமீர் அலி அவர்களும் நினைவு கூரப்பட வேண்டியவரே.

அமீர் அலி அவர்களின் அகால மரணம் அன்பர்களை, ஆதரவாளர்களை, ஏன்? இவரது அரசியலுக்கு மாறுனவர்களைக் கூட அதிர்ச்சிக்குள்ளாக்கியது; கண்கலங்க வைத்தது.

சம்மாந்துறையில் ஒரு தனிக் கட்டிடத்தில் பொது நூலகம் அமைக்க வேண்டும் என்று அமீர் அலி வேண்டுகோள் விடுத்தார். அரசு அதை அங்கீகரித்தது; நிதி ஒதுக்கீடு செய்தது. எந்த விடத்தில் இதனை அமைப்பது? என்ற வினுக்குறி அவரதுமனத்திரையில் பெரிதாகவே விரிந்தது. அந்த நூல் நிலையம் எமதூரின் பிரதான கல்வி மனையாகிய மத்திய மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் அமைவதை அவர் பெரிதும் விரும்பினுர் அத்தோடு வாசிப்புக் கேற்ற அமைதியான சூழலையும் அவர் எதிர்பார்த்தார். பொருத்தமான இடம் அமையும் பிரச்சினை சிலகாலம் தீர்வு காணப்படவில்லை. சல்லடை போட்டபின் ஒரு பள்ளத்தை நோக்கி அவரது சுட்டுவிரல் நீண்டது. காணி தேடும் சிலருக்குக் காலடிப் பிழைப் பாகக் கண்ணிற்பட்ட இந்தப் பள்ளத்திற்கு உரிமை கோரவும் சிலர் தலைப்பட்டனர். பல சிக்கல்களின் மத்தியில் அன்பையும், சில சந்தர்ப்பங்களில் திண்மையான முடிவுகளையும் துணை கொண்டு இப்போது நூல் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நிலப்பரப்பைப் பட்டின சபையின் சொத்தென்று பிரகடனப்படுத்தினுர். அறிவுமனை ஒன்று அமைவதால் சகலரும் இறுதியில் ஒத்துழைப்பு நல்கினர். காலக் கிரமத்தில் இந்தப் பள்ளம் ஊரை துப்பரவு செய்த கழிவுகளின் மணிவயிருக மாறியது. இக்கட்டத்தில் தான் ஊரின் குத்துவிளக்கு அணைந்தது. ஆயினும் பணி தொடர்ந்தது. சம்மாந்துறைப் பாராளுமன்ற உறுப்பினரும் தபால் தந்திப் பிரதி அமைச்சருமான மாண்புமிகு எம். ஏ. அப்துல் மஜீத் அவர்களின் அயராத முயற்சியாலும் நிர்வாகிகளின் தளராத உழைப்பாலும் இன்று நாம் காணும் பொது நூலகம் அழகுறக் காட்சியளிக்கிறது.

தனித் தன்மை வாய்ந்த அரசியல்வாதியாகவும், பொதுமக்களின் நெஞ்சங்களை அன்பால் வெற்றி கொண்ட நற்பிரசையாகவும் வாழ்ந்த அமீர் அலி அவர்களின் பிரிவு நிரப்ப முடியாத ஓர் இடைவெளியாகவே அமைந்து விட்டது. ஒரு மனிதனின் சேவைகள் அவன் வாழ்ந்த காலத்தை விடவும், அவனுடைய மரணத்தின் பின்னரே பெரிதும் நயக்கப்படுவது இயல்பான ஒன்றுதான். நமது நூலக நிர்மாண வேலைகள் நடைபெறும் பொழுதே, அபிமானத் தலைவராக வாழ்ந்த அமீர் அலி அவர்களின் பெயரை இணைத்துப் பொதுமக்கள் பேசத் தொடங்கினர். அமீர் அலி பொது நூலகம் என்று இதற்குப் பெயரிட வேண்டும் என்ற கோசம் பரவலாக எழுந்தது. இக் கூட்டுக் குரல் அரசை எட்டியது. மர்ஹூம் அமீர் அலி அவர்கள் தேசியத் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவராகையால் பொதுமக்களின் வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. பொது நூலகம் என்ற சொற்களோடு அமீர் அலி என்ற மந்திரச் சொல் இணைந்து கொண்டது சம்மாந்துறை மக்கள் பெரிதும் மனம் மகிழ்கின்றுர்கள்.

**வளர்க நூலகம்!**

**வாழ்க அமீர் அலியின் இனிய நினைவுகள்!**

# சம்மாந்துறையின் புராதனச் சரித்திரச் சான்றுகள் சில...

ஏ. ஆர். முகம்மத் அலி
(தலைவர், தகுதிவாய்ந்த அதிகாரி கிழக்குப் பிராந்திய போக்கு வரத்துச் சபை)
யூ. எல். எம். முஹிதீன் ஜே. பி. யூ. எம்.
(சட்டத்தரணி)

சம்மாந்துறை எனும் பதத்தில் சம்மான், துறை எனும் இரு சொற்கள் வெளிப்படு கின்றன. சம்மான் எனும் சொல் இந்தியாவின் பல மாநிலங்களிலும் மலாப் பாசையிலும் தோணி அல்லது கட்டுமரம் எனும் பொருள் பட வழங்கப்படுகின்றது. துறை என்பது நீர் வாகனங்கள் தங்கும் இடமாகும். இப் பெயரை வைத்து நோக்கும் போது என்றோ ஒரு நாள் இவ்வூர் ஒரு துறைமுகம் சார்ந்த நிலப்பரப்பாகவே இருந்திருக்க வேண்டும். கிட்டங்கியில் இருந்து பல மைல்கள் தூரம் காலப் போக்கில் மண்ணல் மூடப் பட்டு விட்டாலும் சம்மாந்துறையே மட்டக்களப்பின் புராதன துறைமுகமாகும்.

ஆதாரம்: " MONO GRAPH OF THE BATTICALOA DISTRICT OF THE EASTERN PROVINCE — "
— S. O. CANAGARATNAA — 1921

1804ம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி பிரித்தானிய அரசு இலங்கைச் சுதேசிகளான 169 பேரை அரசியல் துரோகிகளாகப் பிரகடனப்படுத்தியது. இதில் ஏழு பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சோனகர்களாவர். இவர்களில் மூன்று பேர் திருகோணமலை மாவட்டத்தையும், நால்வர் மட்டக்களப்பு மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள்.

**திருகோணமலை மாவட்டம்**

1. செகு டிடி (தோப்பூர்)
2. பீர் முகம்மது (இலங்கைச் சோனகர் சமயக் கடமை செய்பவர்)
3. சலாம் பட்டி உடையார் (இரண்டாவது விதானை குச்சவெளி)

**மட்டக்களப்பு மாவட்டம்**

1. மீரா உசன் அபூவக்கர் (காரியப்பராயிருந்தவர்)
2. ஒசன் லெவ்வை உதுமா லெவ்வை (காரீயப்பராயிருந்தவர்)
3. அபூவக்கர் ஈசா (முகாந்திரம் சம்மாந்துறை)
4. அனிஸ் லெவ்வை (டச்சு அரசின் முந்நாள் உத்தியோகஸ்தர் மருதமுனை)

மேலே கூறப்பட்ட நபர்கள் பற்றிய எமக்குத் தெரிந்த தகவல்கள் இவ்வளவு தான். இவர்களுடைய உறவினர்கள் மேலும் இவர்களைப் பற்றிய விபரங்களை எங்களுக்குத் தந்தால் எமது எதிர்காலப் பிரசுரங்களில் சேர்த்துக் கொள்வோம் "

ஆதாரம்: இலங்கைச் சட்டக் கோவையின் பாகம் I
பக்கங்கள் 77, 78. (1796—1833)

" போர்த்துக்கீசர்கள் டச்சுக்காரர்களை வெற்றி கொள்ளும் எத்தனத்தில் எலுமிச்சம் பழ நிறமுடைய போர்த்துக்கேயருக்கும் இலங்கைப் பெண்மணிக்கும் பிறந்த ஒருவரை குஜராத்தைச் சேர்ந்த ஆண்டிக் கோலத்தில் காட்சியளிக்கும் யோகி போல உளவு வேலைக்கு அனுப்பி வைத்தார்கள். இவர் பொறியியலிலும், காவற் கோட்டைகள் அமைப்பதிலும் திறமை பெற்றவராக இருந்தார். இந் நபர் சம்மாந்துறை எனும் ஊரில் இரண்டு வருடங்கள் ஜீவித்து போர்த்துக்கீசரின் இங்குள்ள நிலைமைகளை அறிந்து, சம்மாந்துறையில் இருந்து இரண்டரை மைல்களுக்கு அப்பால் ஒரு கோட்டை அமைக்கலாமென டச்சு அதிகாரிகளுக்கு வாய் மொழி அபிப்பிராயம் தெரிவித்தார். இதில் திருப்தியடைந்த டச்சுக்காரர் 1627ம் ஆண்டு குறிப்பிட்ட இடத்தில் கோட்டை நிர்மாணத்துக்காக 13 படைக்குழுக்களை அனுப்பி வைத்தனர்.

மேலும், போர்த்துக்கீசர்கள் தங்கள் ஆட்சியை நிலைப்படுத்தவும், பாதுகாக்கவும் சம்மாந்துறைப் பிரதேசத்தில் தான் தங்கள் காவற் கோட்டையை அமைத்தார்கள். இவர்கள் ஆரம்ப முயற்சியாக மரங்களைக் கொண்டு ஒரு கோட்டையை நிறுவினர். பின்னர் தான் நிரந்தர கோட்டையை நிர்மாணித்தார்கள்.

கண்டி அரசன் இராஜ சிங்கன் போத்துக்கேயர்களின் தந்திரங்களை அறிந்து அவர்களின் போக்கில் கசப்புற்று மனஸ்தாபங் கொண்டான். அவர்களின் பலத்தை முறியடிக்க படைப்பலம் பொருந்திய ஒல்லாந்தர்களின் உதவியை நாடத் தீர்மானித்தான் அவர்களை இங்கு வரவழைக்க ஒரு பிராமணரை தூதுவனுக, 1636ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரும் திகதி அனுப்பினுன். இந்தத் தூதன் போர்த்துக்கேயர்களிடம் சிக்கி தனது உயிரையும் பணயம் வைத்து ஆறுமாதங்கள் அவர்களோடு தங்க நேர்ந்தது' பின்னர் அவன் எப்படியோ டச்சுக் கவர்ணரிடம் கண்டி அரசனின் அழைப்புதனை ஒப்படைத்தான். கவணர் அதனை ஒல்லாந்தில் உள்ள படவியாவில் வசித்த அரசனுக்கு அனுப்பினுன். அரசன் நான்கு கப்பல்களில் வீரர்களை ஏற்றி, முன்னர் இலங்கையில் போத்துக்கேயர்களின் கைதியாக இருந்த ஜெனறல் வென்டைமன் (VANDI EMEN) தலைமையில் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் 1637ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி இந்தியாவில் உள்ள தங்கனல் பட்டினத்தில் வந்திறங்கினர் அங்கு சில நீக்ரோக்களையும் தங்களோடு சேர்த்துக் கொண்டு ஐந்து நாள்க் கடற் பிரயாணத்தின் பின்னர் கல்முனை எனும் இடத்தை அடைந்து அங்கு தங்கள் கப்பல்களுக்கு நங்கூரமிட்டனர். அவர்கள் இவ்வூரில் உலவி அவர்கள் எதிர்பார்த்த சூழ் நிலை இருப்பதை அறிந்தனர். அதனுல் கூட்டி வந்த ஒரு நீக்ரோ மனிதனையும், அவனது சினேகிதன் ஒருவரையும் இணைத்து ஒல்லாந்து அரசனின் கடிதத்தை கொடுத்து, அச்சமயம் பங்கனகமையில் முகாமிட்டிருந்த இராஜ சிங்கனிடம் கையளிக்குமாறு பணித்தனர். இவ்விருவரும் கல்முனையில் இருந்து தங்கள் பிரயாணத்தைத் தொடங்கி சம்மாந்துறைக்கு வந்து சம்மாந்துறையில் இருந்து தான் பங்கனகமைக்கு தங்கள் பிரயாணத்தை ஆரம்பித்தார்கள். டச்சு ஜெனறல் அடம் வெஸ்டர் வோல்ட் (ADAM WESTER WOLD) டச்சு ஜெனறல் இன்னும் வில்லியம் ஜக்கோப்ஸ் கொஸ்ரர் (WILLIAM JACOBSZ KOSTER) என்பாரும் இணைந்து கண்டி அரசனேடு ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். இதில் கண்டி அரசன் முத்திரை ஒப்பந்தம் செய்தான்.

ஒல்லாந்தர் தங்கள் வருகைக்குச் சன்மானமாக 400 பொதிகளில் அடங்கிய கறுவா, 78 அந்தர் மெழுகு, 305.7 இருத்தல் மிளகு என்பன தரவேண்டும் மென்றும், எதிர்காலத்தில் இவ்வகை அன்பளிப்புகளை எதிர்பார்ப்பதாகவும், சொன்னுர்கள் கண்டி அரசன் இதற்கு இணங்கினுன். இந்தப் பொருட்கள் சம்மாந்துறைத் துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதியாகியது.

ஆதாரம்: A TRUE AND EXACT DESCRIPTION OF THE GREAT ISLAND OF CEYLON — BY REVD. RED PHILLIPUS BALDEUS இதன் மூலநூல் டச்சு மொழியில் இருந்து அம்சாடம் எனும் இடத்தில் 1672ம் ஆண்டு பிற்றர் புரேஹியர் (PETIER BROHIER) என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டது.

சம்மான் எனும் பதம் தோணி என்ற பொருளில் தென் இந்தியாவில் பிரயோகத்தில் இருந்தது. புராதன துறைமுகமாக விளங்கிய மட்டக்களப்புத் தரவையில் இருந்த துறை முகத்தையுடைய ஒரு கிராமத்திற்கு சம்மான்துறை என்று பெயர் அமைந்திருப்பதனுல் இங்கு இந்திய முஸ்லிம்களின் வருகையின் பின்னரே இப்பெயர் வழக்கத்துக்கு வந்திருக்க வேண்டும்.

ஆதாரம்: நூறுல் இஸ்லாம் மலர் 6 இதழ் 7 மே மாதம் 1945
இலங்கை முஸ்லிம்களின் வரலாறு.
— வ. மி. ஷம்சுத்தீன்.

டி-ஒய்லி (D' OXLY) என்ற கண்டி இராச்சியத்தின் பிரித்தானியத் தூதுவர் தனது தினக் குறிப்பில் பின்வருமாறு எழுதுகிறுர்.

'' போத்துக்கீஸரின் காலத்தில் சம்மாந்துறைதான் கண்டி இராச்சியத்தின் பிரதான துறைமுகமாக அமைந்திருந்தது. கண்டி அரசனுயிருந்த செனரத்திற்கும் அன்னியர்களுக்கும் இருந்த தொடர்பு பற்றி அறிவதற்கு உளவாளி ஒருவரை போத்துக்கேயர் அனுப்பி வைத்தனர். இவ்வுளவாளி 7 வருடங்கள் சம்மாந்துறையில் தங்கி இருந்து கண்டி இராச்சியத்தில் அன்னிய ஊடுருவல் உண்மைதான் என்றும் சம்மாந்துறையிலிருந்து ஏழு மைல்கள் வடக்கே (கோட்டைக்கல்லாறு) ஒரு காவல் கோட்டை அமைக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்தார். இது நடைமுறைப் படுத்தப் பட்டது.

1617ம் ஆண்டு கண்டி அரசனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே இடம் பெற்ற ஒப்பந்தத்தின்படி கல்லாற்றுக் கோட்டை கண்டி அரசனுக்கு கையளிக்கப்பட்டது.

புளியந்தீவிலுள்ள கோட்டை போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்டன்டைன் டிஸா காலத்தில் கட்டப்பட்டு டச்சுக்காரர்களால் புனரமைப்புச் செய்யப்பட்டதாகும்.

ஆதாரம்: D' OYLY'S TRAVEL'S

கொன்ஸ்டன்டைன் டிஸா போத்துக்கல்லின் தலைநகரமான லிஸ்பனுக்கு பின்வருமாறு எழுதுகிறுர்:

'' நான் 27 நாட்கள் பயணத்தின் பின்னர் மட்டக்களப்புத் துறையை வந்தடைந்து, இத்துறையின் பிரதான பட்டினமாகிய ஸபன்டுரே (XABANDORE) யில் எனது பரிவாரங்களோடு 22 நாட்கள் தங்கியிருந்தேன். (வெல்லவாயவில் இறுதியாக இவர் கலந்து கொண்ட யுத்தத்திற்குச் செல்லும் வழியில்)

ஆதாரம்: " TRAVEL OVA " — CONSTANTINE DE SAA

சிங்கள அரசனுன இராஜ சிங்கன் 16ம் நூற்றுண்டில் அழுத்நுவரையிலிருந்து சம்மாந்துறைக்குப் பிரயாணம் செய்தான். இக்காலத்தில் சம்மாந்துறை மட்டக்களப்புவ என்று அழைக்கப்பட்டது. அரசன் ஓர் ஆற்றைக் கடக்கும் போது முதலை ஒன்று குறுக்கிட்டது. அரசனுடன் வந்த நாலு கோரளை - கேகாலையைச் சேர்ந்த ஒரு வீரன் அம்முதலையை ஈட்டியால் எறிந்து கொன்றுன். இவ்வீரனைக் கௌரவிக்கும் வகையில் பெரஹர காலத்தில் முதலைச் சின்னமிட்ட கொடியை ஏந்திச் செல்லும் பழக்கம் உண்டாயிற்று. இன்னும் அவனது வழித்தோன்றல்கள் பெரஹரவின் போது முதலைக் கொடியை ஏந்திச் செல்லும் நன்மதிப்பைப் பெற்றுர்கள்.

ஆதாரம்: " SEEING CEYLON " — R. L. BROHIER.

'' வில்லியம் போக் என்பவர் தனது தினக்குறிப்பில் பின்வருமாறு எழுதுகிறுர்: 1736 ஏப்ரல் 21ல் காலை 4 மணிக்கு குதிரை வாகனத்தில் கடற்கரையோரமாகப் பிரயாணம் செய்து கவணர் சகிதமாகச் சம்மாந்துறைக் குடாவை வந்தடைந்தோம். கவணர், இக்குடா நீரின் ஆழத்தை அளவெடுத்து அட்டவணைப் படுத்தக் கட்டளையிட்டார். உள்நாட்டிலிருந்து உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்ல இத்துறை அதி சிறந்தது என கவணர் கருத்துத் தெரிவித்தார். மேலும் இப்பகுதியில் தான் மிகச் சிறந்த கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கிருந்து உள்வழியாகச் சென்று சிறந்த நிர்மாணமும் அழகும் பொருந்திய பாண்டிருப்பு, மருதமுனை, நீலாவணை ஆகிய கிராமங்களைத் தாண்டி பிற்பகல் 8 மணியளவில் கல்லாற்றை அடைந்தோம். ''

ஆதாரம்: " TRAVELS IN CEYLON " — RAVEN HERT.

இலங்கையின் மிகப் பழமையான நெல்வயல்கள் இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் தான் அமைந்திருக்கின்றன மகா வம்சத்தில், பராக்கிரமபாகு வெளி நாட்டிற்கு நெல் ஏற்றுமதி செய்ததாகக் கூறப்படுகிறது அக்காலத்தில் அதிக நெல் உற்பத்தி கிழக்கிலேயே இடம் பெற்றிருக்கிறது. அத்தோடு சம்மாந்துறையிலிருந்து தான் அவை ஏற்றுமதியாகியிருக்க வேண்டும். இவையாவும் சரி என்ருல், டொலமி (PTOLEMY) என்ற எகிப்திய புவியியல் ஆய்வாளர் இலங்கைப் படத்திற் குறிப்பிடும் மெக்னஸ் லிடுஸிஸ் (MAGNUS LIDUSIS) எனும் இடம் சம்மாந்துறையாகத்தான் இருக்க வேண்டும்.

ஆதாரம்: " CEYLON IN PTOLEMY'S GEOGRAPHY "
— G. SINNETHAMBY.

1602ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி எட்மிறல் ஸ்பில் பேகன் (ADMIRAL SPIL BERGEN) எனும் ஒல்லாந்தத் தளபதி சம்மாந்துறையில் வந்திறங்கி, கண்டி அரசனின் அழைப்பை ஏற்றுச் செங்கடகலேக்குச் சென்ருன். இங்கு இவனை ஐந்து யானைகள் முழங் காலிட்டு வரவேற்றன.

ஆதாரம்: " DIVERSIONS OF A DIPLOMAT "
— PHILLIP GROWEL.

1627ல் போர்த்துகேயர் தங்களது ஆட்சிக்குட்பட்ட எல்லையில் வாழ்ந்த முஸ் லிம்கள் சகலரையும் வெளியேற்றினுர்கள். செனரத் அரசன் இவர்களில் பலரைக் கண்டிக்கு அருகாமையிலும், 4000 பேரைக் கிழக்குக் கரையிலும் குடியேற்றினுன்.

ஆதாரம்: DUTCH PAPERS (MANUSCRIPT)

30-11-1670ல் பீற்றர் டீ கிறேஸ் (PETAR DE GRAZ) என்ற டச்சுக்காரர் கவணரின் பிரதி நிதியாக வந்து, கல்லாறு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, கொட்டியாரம் ஆகிய இடங்களை நிர்வகித்த பிரதானிகளோடு வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டார். பின்னர் டச்சுக் கவணர் வென்கோவன்ஸ் (VANGOENS) இவ்வொப்பந்தத்தை ஊர்ஜிதப் படுத்தினுர்.........

முகாந்திரம் மௌலா என்பவர் கண்டி அரசனின் ஆணையின் பிரகாரம் 1762ல் ஆங்கிலேயரைச் சந்தித்ததும் சம்மாந்துறையில் தான்.

ஆதாரம்: " WITH ROBERT NOX IN CEYLON "
— HARRY WILLIAM.

குறிப்பு:


பண்டைக் காலச் சம்மாந்துறை ஏற்றுமதித் துறைமுகம், இயற்கையாய் அமைந்த, அரசியல் முக்கியத்துவம் பெற்ற, நெல்லுற்பத்தியில் முன்னின்ற ஒரு அழகிய கிராமமாகும். அதற்கான சான்றுகள் சில மேலே தரப்பட்டன. வீரமுனையைச் சார்ந்த சகதி நீர்ப்பரப்பு, அல்லைக்குள் காணப்படும் கோட்டைச் சிதைவுகள் என்பன இன்னும் தடையங்களாக உள்ளன.

போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்னர் அன்னியர் படையெடுப்பு, மலேரியா நோய், தொடர் வரட்சி காரணங்களால் இங்கு வாழ்ந்த ஆதிவாசிகள் குடிபெயர்ந்தனர். அதன் பின்னர் குடியேறிய முஸ்லிம்கள் தரிசு நிலத்தையும், உவர்நீர் வாவிகளையுமே கண்டனர்.

ஒல்லாந்தரைப் போல் நீர்ப்பரப்பை நிலப்பரப்பாக்கி நைல் நதிப் பிரதேசத்திலுள்ள எகிப்தியரைப் போல் விவசாயம் செய்தனர். இப்படி மண் வேலைகளில் இயல்பாகப் பயிற்றப் பட்ட மக்கள் தான் சட்டசபைக் காலத்தில் பராக்கிரம சமுத்திர புனரமைப்பு வேலைகளில் பெரும்பாலும் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வேலைகளின் போது முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்த பொறியியலாளர் ஜனுப் எம். எம். இஸ்மாயில் அவர்களும் சம்மாந்துறையைத் தாய கமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எங்களால் இயன்ற அளவு சில சரித்திர குறிப்புக்களை மேலே தந்துள்ளோம். இவைகளை மையமாக வைத்து ஆய்வுகள் செய்து, எதிர்காலச் சந்ததியினருக்குப் பயனளிக்கும் வகையில் எமதூர் பற்றிய தெளிவான தனி நூல் ஒன்றினைப் பதிப்பிக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை முன்வைக்கின்ருேம்.

— மலர் ஆசிரியர்.




# SKETCH MAP OF SAMMANTURAI TOWN.

Scale of 16Chs to An Inch.

T.O (Civil)
1/10/1985

# அன்பு வாழ்த்துக்கள்...


கொல்லன் கறல் இரும்பைக் கொழுத்தித் தகதகக்க
அழித்துக் கழிம்பை அகற்றி எடுத்த பின்னர்
கத்திகளைப் புத்திகளைக் காளையர்கள் கைப் பிடிக்கும்
யுத்தமுனை வாள்ஈட்டி கூன்விழுந்த வில் அம்பு
அத்தனையும் பெற்று அறிவு உல கத்தில்
வெற்றி மனிதர்களாய் வீர நடை போடுவதை
ஆக்கும் கலையமுதை அளிக்கின்ற நூல கமாம்
அன்னைக் கென் உள்ளத்தின் அன்பு! வாழ்க.

நாவலர் ஈழமேகம்
**எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி J. P.**


— ★ —

உலகம் போற்றும் உத்தமர் மூவேந்தர்
நலமுடன் கண்டி யரச ரோடு
செல்வச் செழிப்பும் சீருஞ் சிறந்த
நல்வள இலங்கை நாட்டினி லொன்றும்
தெங்கு செந்நெலும் தெரிவையர் போல்
மங்கல வரவை மாரிபோல் வழங்கும்
சம்மான் மிகுந்த தனிப்பெருந் துறையில்
நம்மவர் அறிவை நாளும் துலக்க
அருமை மகனும் அமீரலி யியற்றிய
பெருமை யான பேரொளி யூட்டும்
வாசிக சாலையாம் வளமிகு நிலையம்
ஏசிப் பேசி யெரிந்து விழாமல்
அன்புச் சிறுரும் ஆற்றல் மிக்கோரும்
நன்மை பலபெற நாளும் துலங்கி
நிறைவுகள் பெற்று நீடூழி வாழ்ந்து
குறைகள் உலகில் கூடா திருக்க
இறைவன் அருள்பெற்று இவ்வூர் நாமம்
எங்கு சென்றாலும் அங்கு ஒலித்து
மங்கலமாக வாழ்க! வாழ்குகவே.

**திருவாளர் க. வேல்முருகு**
(ஓய்வு பெற்ற அதிபர்)



மானிடருக்குப் பணி செய்தவரை
மரணம் அழிப்ப தில்லை!
பேணுதலாகவே நினைக்கப் பெறுவர்;
பிறந்தமண் செழிக்கத் தன்னல்
ஆனமட்டும் உழைத்த எம். ஏ.
அமீர் அலி நாமம் வாழ்க!



## சம்மாந்துறைப் பட்டின சபைச் செயலாளர்களும், பதவிக் காலங்களும்.

| | | | |
|---|---|---|---|
| திரு. | P. குருசாமி | :: | 01-01-47 — 26-11-48 |
| ,, | N. A. அல்பிரட் | :: | 01-01-49 — 31-12-49 |
| ,, | N. மயில்வாகனம் | :: | 01-01-50 — 31-12-50 |
| ,, | K. சிவசம்பூ | :: | 01-01-51 — 30-06-51 |
| ,, | K. கணபதிப்பிள்ளை | :: | 01-07-51 — 30-11-56 |
| ,, | A. சிவசுப்பிரமணியம் | :: | 01-12-56 — 30-05-60 |
| ஜனாப். | K. S. ஹமீட் | :: | 01-06-60 — 31-12-63 |
| திரு. | R. திருநாவுக்கரசு | :: | 01-01-64 — 09-04-67 |
| ,, | R. பஞ்சலிங்கம் | :: | 10-04-67 — 31-07-67 |
| ஜனாப். | M. A. சலீம் | :: | 01-08-67 — 18-01-71 |
| திரு. | K. கணபதிப்பிள்ளை | :: | 19-01-71 — 31-10-74 |
| ,, | V. சற்குணராஜா | :: | 01-11-74 — 31-12-75 |
| ,, | K. சோமசுந்தரம் | :: | 01-01-75 — 31-12-77 |
| ,, | K. சுப்பிரமணியம் | :: | 01-01-78 — 14-01-80 |
| ,, | K. கனகலிங்கம் | :: | 15-01-80 — 28-02-80 |
| ஜனாப். | T. A. ஜாயா | :: | 01-03-80 — இன்றுவரை |

— ★ —

## சம்மாந்துறைப் பட்டின சபை நூலகர்களும், பதவிக் காலங்களும்.

| | | | |
|---|---|---|---|
| ஜனாப். | M. சாஹுல் ஹமீட் | :: | 01-08-1952 — 03-07-1969 |
| ,, | P. M. சம்சுடீன் | :: | 18-08-1969 — 30-09-1970 |
| ,, | K. சுலைமா லெவ்வை | :: | 01-11-1970 — 31-08-1971 |
| ,, | M. ஆதம் லெவ்வை | :: | 01-10-1971 — இன்றுவரை |

# அன்புள்ள வாசகரே!

குறுகிய கால அளவில் அவசர வேலையாக அமைந்ததே இம்மலர். நூலகத்திற்கு ஒரு நூல் வெளியிட வேண்டுமென்ற ஆசிப்பே இச்செயலுக்கு அன்னை. நிலைமையை அனுசரித்து ஆசிச் செய்திகளையும், ஆக்கங்களையும் துரிதமாகத் தந்துதவிய பெரியோர்கள், அன்பர்கள்,

இம்மலர் கட்டாயம் வெளிவர வேண்டுமென்ற முனைப்புக் கொண்டு இப் பொறுப்பினை என்மீது பணித்த,

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர்
**திருவாளர் ஏ. விக்னராஜா அவர்கள்,**

பல ஆலோசனைகள் கூறி ஊக்குவித்த

**பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர்**
**ஜனாப் ஏ. ஜே. எஸ். எச். இல்யாஸ் அவர்கள்,**
**மற்றும் பட்டின சபை ஊழியர்கள்,**

அமீர் அலி பொது நூலகம் என்று பெயர் சூட்டப்பட்டமையால் ஈர்க்கப்பட்டு, நயந்து மகிழ்ந்து இச் சிறப்பு மலர் வேலைகளை உற்சாகப்படுத்திய,

**கிழக்குப் பிராந்திய போக்கு வரத்துச் சபையினர்,**

கடுகதி வேலையாக அமைந்தாலும் கலைமனம் கொண்டுழைத்த கல்முனை குட்வின் அச்சக அதிபர்

**திரு. ரீ. மகாதேவா அவர்கள்,**
மற்றும் அன்போடு பாடுபட்ட **தொழிலாளத் தோழர்கள்,**

இம்மலர் வெளியாவதில் இரஸனைப் பாடு கொண்டு எனக்குதவிய, **ஜனாப்களான,**

**ஏ. ஷீ. ஏ. எம். ஹலீம்** (பி. ஏ.)
**எம். ஆதம்லெவ்வை** (நூலகர்)
**என். மஹ்றூப்** (ஆசிரியர்)
**யூ. எம். முஸ்தபா** (ஆசிரியர்)

மேலும் இம்முயற்சி வெற்றி பெற உதவிய அன்பர்கள் அனைவருக்கும் என் அகம்பூத்த நன்றி.

இப்படிக்கு,

*பஸீல் காரியப்பர்.*
(மலர் ஆசிரியர்)

# என் இனிய இளையவரே!

பாவலர் பஸீல் காரியப்பர்

செந்நெல் விளையும் சேவகப் பற்றுவெளி
தன்னை ஒரு புறமும்
தென்னை மரங்கள் வாகை செறிந்த
இன்னுமொரு பின்னணியும்
முன்னே பேர்பாதை; அன்னை எனப்படும் ஓர்
கல்விமனை அல்லசலும்
தன்னருகே ஓடும் நெல்லுப்பிடி ஆற்றின்
தழுவல் உறவோடும்

ஊரின் முகப்பில் உயர்மாடிக் கட்டடம்! ஓர்
உபதேசி நிற்பது போல்;
தூர உலகம் தெரியும் படியாகக் கண்ணாடிச் சாளரங்கள்
துலக்கம் பெற அறிவு;
சீராள்மைச் சிந்தனைகள் செழிக்க மனம் வெளுக்கத்
தெரிவு செய்த நூல் வகைகள்
பாரின் அன்றாடச் செய்திகளைப் படித்தறிந்து கொள்ளப்
பத்திரிகை, சஞ்சிகைகள்
ஊர் சிறக்கப் பேசவென உயரே ஒரு கூடம்
இயற்கை அழகமைதி
தூரத்து வானத்தில் தொடர்புதுமை; வல்லவனின்
தூரிகையின் ஓவியங்கள்

பட்ட மதுரை மரமொன்றும் ஞானியைப்போல் புதினங்கள்
பார்த்துக் கொண்டிருக்கிறது!
வட்டைக்குள்ளாலே வரும்காற்று; இடையிடையே
பட்சிகளின் கீதங்கள்!

வாருங்கள் என் இனிய இளையவரே
வாசித் தறிவோங்க!
கூர்ஞானம் அன்புமனம் கொண்டு உலகத்தின்
கொடுமைகளைச் சங்கரிக்க
நேர்நின்று போராடும் நெஞ்சுடைய நீதிநெறி
நிறைந்த ஓர் ஆத்மாவாக!

இல்லாமை இனவாதம் ஏற்றத்தாழ் வெலாம் பொசுக்கி
இன்பமுறும் மனிதர் வாழும்
நல்லபுது உலகத்தை நாம் படைக்க வேண்டு மென
நாடுவோம்! எழுந்திடுங்கள்!

இளையவரே! எங்களது இளமையிலே சூழ்நிலைகள்
இப்படியாய் இருக்கவில்லை!
நலமுடைய நாளே இந்நாள் நமது மண்மடியில்
மலர்கின்ற நூலகத்தை
உரமாற வாழ்த்திடுவோம்! எதிர்காலச் சந்ததியும்
வளமான வாழ்வுகாண
நலமாக ஒருதாயின் உயர்விற்குப் பணிசெய்ய
நாடிவர வேண்டுகின்றேன்.

# சம்மாந்துறைப் பட்டின சபைத் தலைவர்களும், பதவிக் காலங்களும்.

| | | |
|---|---|---|
| ஜனுப். U. M. சுலைமாலெவ்வை | :: | 1947 — 1949 |
| ,, M. U. உதுமாலெவ்வை | :: | 1950 — 1952 |
| ,, M. A. லத்தீப் | :: | 1953 — 1955 |
| ,, M. A. அப்துல் மஜீத் | :: | 1956 — 1961 |
| ,, M. A. அமீர் அலி | :: | 1962 — 1968 |
| ,, M. Z. கமால் முஹம்மத் காரியப்பர் | :: | 19-01-1969 — 28-02-1970 |
| விசேட ஆணையாளர்<br>திரு. அன்ரன் அல்பிரட்<br>R/A. C. L. G. | :: | 01-03-1970 — 19-09-1970 |
| ஜனுப். M. A. அமீர் அலி | :: | 20-09-1970 — 08-08-1977 |
| விசேட ஆணையாளர்<br>திரு. V. P. சற்குணராஜா<br>Clerk, Class I | :: | 09-08-1977 — 07-11-1977 |
| விசேட ஆணையாளர்<br>திரு. K. துரைராஜா<br>A. G. A. சம்மாந்துறை | :: | 08-11-1977 — 17-05-1979 |
| விசேட ஆணையாளர்<br>ஜனுப். A. S. M. ஆரிப்<br>D. O., R. D., அம்பாறை | :: | 18-05-1979 — 16-09-1979 |
| விசேட ஆணையாளர்<br>ஜனுப். M. A. M. மேர்சா<br>I. E., கல்முனை | :: | 17-09-1979 — 30-06-1981 |
| மாவட்ட அபிவிருத்திச் சபை<br>பிரதேச உ. உ. ஆணையாளர் அம்பாறை<br>அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் | :: | 01-07-1981 — 06-09-1981 |
| திரு. A. விக்னராஜா<br>A. G. A. சம்மாந்துறை | :: | 07-09-1981 — 31-12-1982 |
| கணக்கதிகாரி<br>ஜனுப். T. A. ஜாயா செயலாளர்<br>L. G. S. | :: | 01-01-1983 — இன்றுவரை |

கிழக்குப் பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் முதல் தலைவரும் எங்கள் அபிமானத்திற் குரியவருமான மர்ஹூம் எம். ஏ. அமீர் அலி அவர்களின் பொதுப் பணியை கௌரவிக்குமுகமாக அன்னாரின் பெயரினைப் பொது நூலகத்திற்குச் சூட்டியமை குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

அமீர் அலி பொது நூலகத் திறப்பு விழா மலர் வெளியீட்டில் கலந்து கொள்வதில் நிறைவு கொள்கிறோம். மலருக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை,**
**கல்முனை.**